

FREE EDITION

July - 2017

ஜோதி 11 : சுடர் 05 - 125

# ஜோதி

## Jothi
Spiritual Newsletter

ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

"ஓம் சக்தியே
ஓம் பங்காரு அடிகளே போற்றி ஓம்"

**மெல்போர்ணில்**

**ஆன்மிககுரு அருள்திரு அம்மாவின் அருள் வேண்டும்**

**குரு பூரணை தினம்**
(குரு பூர்ணிமா)
**அனுஷ்டிப்பு**

**09.07.2017** காலை 9.30 மணி



**guru poornima**

Today is the best day to
pay the tribute to your Guru.

**Latham Centre**
**Cnr. Of Latham Cr. & Deakin Cr.**
**Dandenong**
(Mel.Ref.: 90 C 01)

Stick to the way you are now, Follow the paths shown by your Guru, may Guru's blessings always shower on you.

**Happy Guru Poornima**

## ஆதிபராசக்தி

"ஆண், பெண் இரு பாலரால் ஆனதே இவ்வுலகம். விபூதி வெண்மை, குங்குமம் சிவப்பு. அதேபோல், ஆண் விந்து வெண்மை. பெண் விலக்கு சிவப்பு. ஆண் கருவான விந்துக்கு வயதே கிடையாது. ஆனால், பெண் கருவான விலக்குக்கு வயதுண்டு. பெண்ணிற்கு விலக்கு ஒரு வயதில் நின்றுவிடும். நின்றதும் பெண்ணிற்குச் சக்தி சேருகிறது. எனவேதான், நம் ஆன்றோரும், சான்றோரும் ஆதிபராசக்தியைப் பெண்ணாக உருவகம் செய்தனர். ஆவதும் அதனால் தான், அழிவதும் அதனால்தான். ஆகவே, பெண் வடிவான ஆதிபராசக்தியே அனைவருக்கும் தாய். தாயிடந்தான் தயை, கருணை, அன்பு, தியாகம், சாந்தம், பொறுமை, கைமாறு கருதாக்கொடை, சுயநலமில்லாச் சமநோக்கு, குறிப்பறிந்து உதவும் குணம் யாவும் சிறக்கக் காண்கிறோம். சக்திதான் முழுமுதற் பொருள். சக்தியிலிருந்தே முத்தொழில் புரியும் மூவரும் தோன்றினர்"எனக் கவைப் பேரொளி தெய்வத்திரு பொதிச் சுவாமிகள் அருளினார்கள்.

**பொன். பரமகுரு** I.PS, M.A., B.L,
தமிழ்நாடு காவல்துறை முன்னாள் தலைவர்

"சிவம் என்பது செயலற்ற தத்துவம். மகா மாயையாகிய சக்தி சிவத்தத்தைத் தொட்டவுடன் ஆணவ மாயை பிறக்கிறது. ஆணவத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் - இவ்வாறாகப் பஞ்ச பூதச் சேர்க்கையால் பிரபஞ்சமும், உயிர்களும் தோன்றுகின்றன. இந்தப் பரிணாம நெறியே சக்தியின் விளையாட்டு"என்கிறார்கள் சித்தர்கள். "பராசக்தியின் உதவியில்லாவிட்டால் பரமசிவனால் அசையவும் முடியாது"என்கிறார் ஆதிசங்கரர் தமது சௌந்தர்யலகரியில்.


(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

**மேல்மருவத்தூர்**
**ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில்**

**ஆடிப்பூர பெருவிழா**

26.07.2017 – புதன்கிழமை – கஞ்சி வார்த்தல்
27.07.2017 – வியாழக்கிழமை – பால் அபிடேகம்

**மெல்போர்ண், குயின்ஸ்லாந்து மாநிலம்**
**ஆடிப்பூர பெருவிழா**
கஞ்சி வார்ப்பும் பாலபிடேகமும்
30.07.2017
**சிட்னி மாநிலம்** - 28.07.2017




அன்னையின் அருள்வாக்கு:

**"பிறப்பிலிருந்து இறப்பு வரையில் மனிதனுக்கு ஏழு நிலைகள் உண்டு.**
**அந்த ஏழு நிலைகளிலும் மனிதர்களுக்கு ஆன்மிக உணர்வு இருக்க வேண்டும்."**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


**ஆதிபராசக்தி**
Page: 1 – 3

**அம்மாவாலும் மன்னிக்க முடியாத பாவம்: அகம்பாவம்**
Page: 14 - 15

**UPCOMING EVENTS**

Melbourne: 4, 12, 13
Sydney: 5, 8

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 9

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 7

**Divine Miracles**
Page: 10

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 9

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16


# ஆதிபராசக்தி...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

நம் நாட்டில் ஆதிபராசக்தியின் வழிபாடு மிகவும் பழமையானது. வடக்கே மொகஞ்சாதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வு ஆராய்ச்சியின் போது கிடைத்த அன்னையின் மண் உருவங்கள் சக்தி வழிபாட்டு தத்துவத்திற்கு இலக்கணம் வகுக்கின்றன. தொல்பொருள் அறிஞர்களின் கணக்குப் படி ஏறத்தாழ கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன்பே சக்தி வழிபாடு நம் நாட்டில் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்திலும், சங்க காலத் தமிழ் இலக்கியத்திலும் தெய்வத் தாய்க்குக் கொற்றவை என்றும், ஐயை என்றும் பெயர் சூட்டியுள்ளனர். இன்று சக்தி வழிபாடு ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் சிறப்புற நடந்து வருவது நாம் அன்றாடம் காணும் காட்சியாகும். இது ஓர் சக்தி யுகம்!

நம் முன்னோர் அண்ட சராசரங்கள் அனைத்தையும் தெய்வமாய்க் கண்டனர். எல்லையற்ற பரம் பொருளை எல்லாம் வல்ல சக்தியாய் வழிபட்டனர். நிலத்தின் திண்மை, நீரின் குளிர்மை, நெருப்பின் வெம்மை, காற்றின் கடுமை, ஆகாயத்தின் ஓங்கார ஓசை யாவும் சக்தியே என்றனர். அவை தாய் அம்சமே எனக் கொண்டனர். நமக்கு உண்ண உணவைத் தருவது தான்ய லட்சுமி, செல்வச் சிறப்பை நல்குவது தனலட்சுமி, மழலைச் செல்வங்களை அருளுவது சந்தான லட்சுமி, சகல நலன்களையும் அளிப்பது சௌபாக்கிய லட்சுமி, எல்லா வித்தையும் போதிப்பது வித்தியா லட்சுமி, வெற்றி வாகை சூடுவது விஜய லட்சுமி வீர தீரத்தை வளர்ப்பது தைரிய லட்சுமி, ஆதியும் அந்தமுமாய் விளங்குவது 'ஆதி லட்சுமி, தித்திக்கும் பாலைத் தரும் பசுவைக் கோமாதா, அனைவரையும் தாங்கும் பூமியைப் பூமாதா என எல்லாவற்றையும் தெய்வத் தாயாகக் கொண்டாடுவர்.

"அன்னை வடிவமடா! இவள்
ஆதிபராசக்தி தேவியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா! பின்னர்
யாவுமுலகில் வசப்பட்டுப் போமடா!"

எனப் பாடுகிறார் பாரதியார். வடிவமற்றதாய், குணமற்றதாய் இருக்கும் இறைத் தத்துவத்திற்கு, இந்தப் பரம் பொருளுக்கு ஒரு வடிவத்தைக் கற்பித்து, அதை அன்னை என்று வணங்கி வழிபடுவது சாலச் சிறந்தது.

இறையைத்தாயாகக் கருதி ஊடாடுகிறவர்களுக்குச் சோதனைகளும் அதிகமாக ஏற்படுவதில்லை. தனயனுக்குத் தாயிடமிருக்கும் உறவு பாதுகாவல் நிறைந்த உறவு. அதில் ஆபத்துக்களும், அபாயங்களும் இல்லை. அவ்வளவு கருணை நிறைந்தது தாயுள்ளம். நாம் என்ன குற்றம் செய்தாலும் அவள் மன்னிக்கக் காத்திருக்கிறாள். நாம் காலால் உதைத்தாலும், உதைத்த காலுக்கு ஒரு கழல் அணிவித்து மகிழ்பவள் தாய். ஏராளச் சகிப்புத் தன்மையும், எல்லையில்லா அன்பும் தாய்க்கு இருப்பதால் அச்சமின்றி அவளோடு நாம் பழகலாம். இறையைத் தாயாகக் கற்பனை செய்து அவளோடு நாம் ஊடாடும்போது நம் உணர்வு பெருகுகிறது. நம் ஆணவம் மெல்ல மெல்லக் கரைகிறது. ஆனந்தம் மேலிடுகிறது.

பராசக்தி வழிபாடு எவ்வளவு சுகத்தைக் கொடுக்கிறது, எப்படி அபயம் அளிக்கிறது என்பதைக் காட்டுகிறது பின்வரும் பாடல்:

"கேடா வருநமனைக் கிட்ட வராதே தூரப்
போடா என ஓட்டி, உந்தன் பொற்கமலத்தாள் நிழற்கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால், அம்மா உனைக்
கூடாதென்றார் தடுப்பார், கோமதித்தாய் ஈஸ்வரியே?"

என, "யம பயத்திலிருந்து என்னைக் காப்பாற்று" என்று கோமதித் தாயைப் பார்த்துக் கேட்கிறார் நெல்லை அழகிய சொக்கநாதர் என்ற பக்தர்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# ஆதிபராசக்தி... (2ஆம் பக்க தொடர்ச்சி)

இப்படியெல்லாம் தாயிடத்தில் துணிந்து வரம் கேட்கலாம். அதுவும் உரிமையோடு கேட்கலாம். கொடுக்க மாட்டேன் என்று கூறத் தாய்க்கு மனம் வராது.
ஆகவே, நாம் ஆதிபராசக்தியைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடாது, நம் அறிவை ஆட்படுத்தி, ஆணவத்தை அடக்கி, உணர்வை அன்பாக வெளிப்படுத்தி, இறை அனுபவத்தில் ஆழ்ந்து, பக்தியோடு அத்தாயை வழிபட்டால், தியானித்தால் நாம் பலவிதப் பலன்களையும் சகலவித நன்மைகளையும் அடைவது திண்ணம். பக்தி என்றால் பற்றுதல் எனப் பொருள். உலகப் பற்று, உடல் பற்று, உயிர்ப்பற்று, ஏனைய பற்றுகளை விட்டுவிட்டு, உள்ளத்துக்குள்ளே அறிவொளியாக விளங்கி, அதுவே உள்ளும் புறமும் பேரொளியாகத் தோன்றி, உலகம் யாவற்றிற்கும் ஒரு பரம்பொருளாயிருக்கும் ஆதிபராசக்தியைப் பற்றி நிற்பதே சிறந்த பக்தியாகும்.

நமது பக்தி வழிபாட்டிற்கும், தியானத்திற்கும் இலக்காய், ஆதாரமாய் விளங்குவதுதான் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின் ஆலயம், ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடமாகும். மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடக்கி ஒடுக்கி, உண்மையைத் தேடி, உள்ளொளியை நாடி, அறிவை அறிந்து, ஆன்மாவை லயிக்கச் செய்யும் ஒப்பற்ற இடமாய்த் திகழ்வது அவ்வாலயம்.
அவ்வாலயத்தில் அமர்ந்து அருளாட்சி புரியும் அன்னை அருள்வாக்கில், "செபம், தவம் என்ற இரண்டும் இல்லாமல் என் அருளைப் பெற முடியும். முழுவதுமாக என்னைச் சரணடைந்து, நான் இடும் பணியை ஏன், என்ன, எதற்கு என்ற ஆராய்ச்சியில் ஈடுபடாது, முழு மனத்தோடு செய்தால், என்னை எளிதில் அடைய முடியும்.

தொண்டு நெறி என்ற இந்த நெறியில் இருக்கும் சௌகரியத்தைத் தெரிந்து கொள். தவம் மேற்கொண்டு புற்றாகவும், மரமாகவும் நிற்கின்றவர்கள் என்னை இன்னும் காணவில்லை. ஆனால், என் பணியைத் தலைமேற்கொண்டு செய்யும் உன் எதிரில் நான் நிற்கிறேன். இந்த எளிய வழியை நீ விட்டு விடாதே" என்றருளியுள்ளாள்.

அவ்வரிய தொண்டு நெறியைக் கடைப் பிடித்து, திரிகரண சுத்தியோடு பக்தி செலுத்தி, பரிபூரணமாய்ச் சரணடைந்து, மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தியை அன்றாடம் வழிபட்டு வந்தால் நமக்கு,

"பக்திப் பெருக்குண்டாம், பராசகதி அருளுண்டாம்
உண்மை ஒளியுண்டாம், உணர்வுத் தேற்றமுண்டாம்
உள்ளத் துருக்கமுண்டாம், உயர்ந்த குணமுண்டாம்
ஊக்கம் மிகவுண்டாம், ஒழுக்க நெறியுண்டாம்
அறிவுத் தெளிவுண்டாம், ஆற்றல் திறனுண்டாம்
திட நம்பிக்கையுண்டாம், திருவின் வரவுண்டாம்".

இவ்விதம்'. இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய எல்லா நலன்களும் நாம் ஆதிபராசக்தி வழிபட்டால் பெறலாம். ஆகவே, ஆதிபராசக்தி வழிபாடு செய்து நாம் முக்தி பெற முயல்வோமாக!

நன்றி: 1982 கோபி ஆன்மிக மாநாடு – விழா மலர்

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
ஆதிபராசக்தி இணையத்தளம்

adhiparasakthi.co.uk




www.adhiparasakthi.co.uk

"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற

இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

9ஆவது அகவையாக அன்னை ஆதிபராசக்தியின் அவதார காலத்தின் நிகழ்வுகளை ஆவணப்படுத்தி வெளியிட்டு வரும் ஆதிபராசக்தி இணையத்தளத்தின் சேவை மென்மேலும் வளர, ஆன்மிககுரு அருள்திரு அம்மாவின் ஆசி துணைகொண்டு "ஜோதி" ஆன்மிக செய்திச்சுடர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

# Melbourne - Mandrams – Upcoming Events – July 2017

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram
## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

### கூட்டு வழிபாடுகள்:

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 02.07.2017 | Sunday | ஆனி | 18 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 07.07.2017 | Friday | ஆனி | 23 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |




| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 14.07.2017 | Friday | ஆனி | 30 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 16.07.2017 | Sunday | ஆனி | 32 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 21.07.2017 | Friday | ஆடி | 05 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 23.07.2017 | Sunday | ஆடி | 08 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 28.07.2017 | Friday | ஆடி | 12 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |

08.07.2017 – சனி - அமாவாசை, 23.07.2017 – திங்கள் - ஞாயிறு




# Sydney - Mandrams - Upcoming Events – July 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140



| | | | |
|---|---|---|---|
| 07.07.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.07.2017 | SATURDAY– சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 14.07.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.07.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## “ஆடிப்பூர பெருவிழா”

கஞ்சி வார்த்தலும் சுயம்பிற்கு பாலாபிடேகமும்

**28.07.2017**

இரவு 7.30 மணி முதல் 9.30 மணி வரை

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆனி – அமாவாசை–பௌர்ணமி :**
தடைப்பட்ட திருமணம் விரைவில் நடைபெறும்

**ஆடி - அமாவாசை–பௌர்ணமி :** ஆயுள் விருத்தி உண்டாகும்.
அனைத்து செல்வங்களும் சேரும்.

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



### தொண்டர்கள் பற்றி

“நீங்கள் (செவ்வாடைத் தொண்டர்கள்) அனைவரும் பூமி! பூமி செழிப்பாக இருந்தால் தான் ஆன்மிகம் என்னும் பயிரும் செழித்து வளரும்.”

### யார்யார் எப்படி?

“எல்லோருடைய கணக்கையும் நான் வைத்து இருக்கிறேன். யார் யார் எப்படி? யார் என்ன செய்கிறார்கள்? என்பது இந்த மண்ணை அவர்கள் மிதித்தவுடன் எல்லாம் என் மனதில் பதிவாகிவிடும்.”

### அன்னையை எப்படி வேண்டிக் கொள்ள வேண்டும்?

“நீங்களெல்லாம் அம்மாவிடம் வருகிறீர்கள். அம்மாவின் முன் நின்றதுமே உங்கள் குடும்பப் பிரச்சனைகள் தான் முன்னால் நிற்கின்றன. எனவே, முதலில் உங்கள் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறீர்கள். அதன்பிறகே மௌனமாக அன்னையை வணங்குகிறீர்கள். அவ்வாறு அம்மாவை வேண்டக்கூடாது.

முதலில் அம்மாவிடம் மனம் செலுத்திப் போற்றிப் புகழ்ந்து வணங்கிவிட்டு, இரண்டாவதாகக் குடும்பச் சிக்கல்களைச் சொல்லி அவற்றைத் தீர்க்கும்படி வேண்டுதலைச் செய்ய வேண்டும்..”



# அருள்வாக்கும் அனுபவங்களும்

## செய்வினையால் பாதிக்கப்பட்ட குடும்பம்

பொள்ளாச்சியைச் சேர்ந்தவர் திருமதி மஞ்சுளா குடும்பம். அவர் குடும்பம் செய்வினையால் பல தொல்லைகளுக்கிடையே அவதிப்பட்டுக் கொண்டுவந்தது.

வீட்டில் வைத்த பொருட்கள் திடீரென்று காணாமல் போகும். எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் பொருட்கள் காணாமல் போவது பெரிய புதிராக இருந்தது.

அம்மா பக்தர் ஒருவர் அம்மா படமும், மந்திர நூலும் கொடுத்து வழிபட்டு வரச்சொன்னார். செவ்வாய்க்கிழமை தோறும் பூசை செய்து வந்தார். அதன்பிறகும் தொல்லைகள் தொடர்ந்தன.

ஒருமுறை கறுப்புத் துணியில் வெள்ளை நூல் போட்டுக் கட்டிய பொம்மை ஒன்று வீட்டின் மூலையில் கிடந்தது. அதைப்பார்க்கும்போதே மஞ்சுளா பயந்துவிட்டார். ஒரு ஆள் மூலமாக அதை எங்காவது போட்டுவிட்டு வருமாறு அனுப்பினார். அந்தப் பொம்மையைப் போட்டுவிட்ட கொஞ்ச நேரத்தில் காணாமற்போன ஒரு சில பொருட்கள் மட்டும் ஒரு வாரமாக வந்து கொண்டிருந்தன. வீட்டில் நடமாடுகிறபோதே திடீரென்று ஒரு பொருள் தானாக வந்து விழும்.

பல மந்திரவாதிகளை வரவழைத்துப் பரிகாரம் செய்ய முயன்றார்கள். ஒன்றும் பலனளிக்கவில்லை.

மேல்மருவத்தூர் வந்து அன்னையிடம் அருள்வாக்கு கேட்டார்.

“மகளே! உரலுக்கு ஒருபக்கம் இடி! மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி! என்பதுபோல உன் வாழ்க்கையில் சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நீ ஒரு வருடம் பொறுமையாக இரு! அதுவரை 108, 1008 மந்திரங்களை விடாமல் படித்துவா! மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்” என்றாள் அன்னை.

ஊர் வந்து சேர்ந்ததும் மீண்டும் துன்பங்கள் தொடர்ந்தன. வீட்டில் காரணமின்றி அடிக்கடி சண்டை சச்சரவுகள் உண்டாகும். தலைமுடி வந்து விழும். நகைகள் காணாமற்போகும். அன்னை ஒரு வருடம் பொறுமையாக இரு! அதுவரை மந்திரங்கள் விடாமல் படித்துவழிபட்டு வா! என்று சொல்லியதால் அன்னையின் படத்தின் முன் அமர்ந்து அழுதுகொண்டே மந்திர நூலில் உள்ள மந்திரங்களைப் படித்து வந்தார் திருமதி மஞ்சுளா.

ஒருநாள் அம்மாவின் படத்துக்கு சாம்பிராணி போடுவதற்காக கரண்டியில் சிறிது நெருப்பு கொண்டுவந்து வைத்துச் சாம்பிராணி காட்டியபிறகு, மந்திரநூலைப் படித்துக் கொண்டிருந்தார் மஞ்சுளா.

அப்பொழுதே மனத்தில் ஒரு பயம்! கிலி! இந்த நெருப்பு மூலமாக வீடு தீப்பற்றிக் கொள்ளுமோ..? அந்த பயத்திற்கேற்றாற்போல அன்றிரவு 9 மணியளவில் டைனிங் ஹாலில் தீப்பிடித்துக் கொண்டது. அங்கே தீ பிடிப்பதற்கு வாய்ப்பாக பொருள் எதுவுமில்லை. அப்படியிருந்தும் தீப்பிடித்துக் கொண்டது. அந்தச் சமயத்தில் வீட்டில் யாருமே இல்லை. வீட்டார் அனைவரும் வெளியே போயிருந்தனர். திரும்பி வந்து பார்த்தபோது தீ கொழுந்துவிட்டு எரிந்தபடி இருந்தது. தீயணைப்புப் படையினர் வந்து அனைத்துக் கொண்டிருந்தனர். அன்னை அந்தக் குடும்பத்தைத் தீ விபத்திலிருந்து காப்பாற்றிவிட்டாள்.

பிறகு வேறு வீடு மாற்றிக் கொண்டார்கள். அங்கும் தொல்லைகள் வந்தபடி இருந்தன.

இருமுடி விரதமிருந்து, சக்தி மாலையணிந்து இருமுடி செலுத்திய பத்து மாதங்களில் பிரச்சினைகள் தீர்ந்தன.

### ஒரு குரு தேவை:

**“உன் உருவத்தைப் பார்க்கக் கண்ணாடி தேவை. அக்கண்ணாடியில் உன் பின் பக்க உருவத்தை முழுமையாகப் பார்க்க முடியாது.**

**உனக்குத் தெரியாத ஓர் உருவம் உனக்கு உண்டு. உன்னுடைய பின்பக்க உருவத்தைப் பார்ப்பதற்கு ஆதிபராசக்தி என்ற கண்ணாடி தேவை. அதற்கு ஒரு குரு தேவை.”**

## பிடி அரிசியும், அன்னதானமும்

**“ஆடிப்பூர விழாவின்போது, பெண்கள் பிடி அரிசி போட்டுத் தருமம் செய்ய வேண்டும். இலை போட்டு அன்னம் பரிமாற வேண்டும்”.**

**-அன்னையின் அருள்வாக்கு**

# Sydney - Mandrams - Upcoming Events – July 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 07.07.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.07.2017 | SATURDAY– சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 14.07.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.07.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**ஆடிப்பூரக்கஞ்சி**

"ஆடிப்பூரக்கஞ்சி அனைத்தும் இங்கே வந்து சேர்ந்த பிறகு படைத்த பிறகு அனைவரும் அதனை வாங்கிக் குடிக்க வேண்டும்."

- அன்னையின் அருள்வாக்கு

**ஆடிப்பூர பெருவிழா**

**கஞ்சி வார்ப்பும் பாலபிடேகமும்**

**28.07.2017**

**மாலை 7.30 மணி**

## ஆடிப்பூரம் போன்ற விழாக்கள் ஏன்?

"ஏதோ ஒரு நாள்! ஏதோவொரு குடும்பம்! ஏதோவொரு வினை! ஏதோவொரு சக்தி! ஏதோவொரு இனச்சேர்க்கை என்றெல்லாம் கருதி வாழ்கிற உங்களுக்கு, அப்படியில்லாமல் உங்கள் மன நிம்மதிக்காகவும், அமைதிக்காகவுந்தான் ஆடிப்பூரம் போன்ற விழாக்கள்!

பருவ காலத்தைப் பொறுத்து இயற்கை அமைவது போல மனிதர்களாகிய நீங்கள் செய்த பாவங்கள் தணிவதற்காகத்தான் ஆடிப்பூரம் போன்ற விழாக்கள்!"

## ஆடிப்பூரமும் கஞ்சியும்:

"பத்து ஏழைகளைக் கூட்டி வந்து அவர்களுக்குக் கஞ்சி காய்ச்சக் கலயம் வாங்கி, அதற்கு மஞ்சள் பூசி, வேப்பிலை சுற்றி, உன் கையால் அவர்களுக்குக் கஞ்சியெடுத்து வைத்துக் கூட்டி வர வேண்டும். அவர்களையெல்லாம் சேர்ந்து உன் தலையில் கஞ்சியெடுத்து வைக்க வேண்டும். பத்து ஆன்மா அவ்வாறு ஒன்று சேர்ந்தால் உனக்குப் பலனுண்டு."

**"ஆடிப்பூரம் என்பது ஆன்மிகப் பூரம். பூரம் என்றால் பூரிப்பு, மகிழ்ச்சி என்று பொருள்.**

**ஆடிப்பூரத்தில் பூமி என்ற கோளுக்கு நன்மை உண்டு.**

**அன்னையின் அருளுக்கும், தாயின் பாசத்திற்கும் ஆடிப்பூரத்திற்கும் தொடர்பு உண்டு."**

**-அன்னையின் அருள்வாக்கு**



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

தமக்கையாய் இருக்கும் ஒரு பெண்தான், தாரமாக மாறி, பின் தாயாகவும் மாறுகிறாள். மூன்று பெண்மையின் மூன்று நிலைகளாயினும் தமக்கையையும், தாரத்தையும்விட தாய்க்கு அதிக மதிப்பும், மரியாதையும் கொடுப்பது ஏன்.?

தாய்மை அடைந்த பிறகுதான் பெண்மை முழுமை அடைகிறது. ஒரு பெண் குழந்தையாக இருக்கும்போது துள்ளித் திரிகிறாா். பருவம் அடைந்தவுடன் உடலிலும், உள்ளத்திலும் மாற்றம் ஏற்படுகின்றது. பொறுமையும், அடக்கமும் தானாக வளருகின்றது. தாலி கழுத்தில் ஏறித் தாரமானதும் குடும்பச் சூழ்நிலையைத் தனதாக்கிக்கொண்டு வாழ முற்படுகின்றாள். தாயானதும்தான் மேலும் உயர் பதவிக்குச் சென்று விட்டது போன்ற பொறுப்புணர்வும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தனக்காக வாழாமல், தன் குழந்தைக்காக வாழ வேண்டும் என்ற தன்னலமற்ற தியாக உணர்வும் தாய்மையால்தான் முழுமை அடைகிறது. அதனால்தான் தாய்மைக்கு உலகில் எப்போதும் மதிப்பும் மரியாதையும் உண்டு.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம் |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

**உயிர் பிரிந்தாலும்...**

**“உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் ஆன்மா உன்னிடம்தான் உள்ளது. அந்த ஆன்மா சுத்தமாக இருக்க வேண்டும்.”**

**–அன்னையின் அருள்வாக்கு**

# Divine Miracles at Melmaruvathur

## A Communist experience:

A communist ideologist well-versed in the contributions of Karl Marx, Engles, and Lenin believed totally in Lenin's diction that 'religion is the opinion of the masses'. He believed that most actions of the common people are crazy. He did not believe in Sages, God man and Philosophers. He thought that these people cannot predict sound behavior especially the social behavior of the society of the atomic-age. Marxism was the only solution, according toHer. He used to argue that if private property was abolished, concepts like God, Bhakthi and fate will be shattered. He believed in inquisitiveness and logical analysis. He had heard about Melmaruvathur and spiritual revelation, went to Maruvathur to find out what it was.

When he went for revelation Mother spoke about his policies and ideals. She said, "Son! You say that you want to uplift the poor. I am here for the same reason." Then She spoke about his family and its problems. Then she extended her palm before him asking him why his forehead did not have anything on it. Holy-ash flossed from Her hand and that gentleman applied it on his forehead. He wondered how Bangaru Adigal could have known about him and his family. He was so filled with wonder that he started going to Maruvathur often. He got involved in Mother's activities.

In 1979 in the month of March he went for spiritual revelation. Mother said, "Son! Your brother-in-law is expecting you. Go to him immediately! Do not worry about money. Go to him without spending much money! The coming fifteen days are not favorable to you, yet I shall save you". He had attained a frame of mind whereby he did not question anything Mother did. Yet he had a doubt! He wondered how a twenty three year old, robust man like him could get sick. Mother had said about saving his life. Why did She say so, was his doubt.

As Mother had said he went to see his brother-in-law at Dindigul. His brother-in-law asked him, "What? Did you receive my telegram"? He wondered in his mind, "What telegram". He then thought about Mother's compassion and became emotional. He finished his work with his brother-in-law and started from Dindigul. He wanted to get down on his way at Maruvathur. He did not get any bus and a large crowd was waiting. He could not get a straight bus, hence he went to Tiruchi and reached Vriddhachhalam. He could not get a bus tket, so he went to Ullundur Pettai. There also he did not get accommodation in a bus.

A lorry was standing at Ullundur Pettai and the name Adi Parasakthi was written on it. He, along with another man approached the lorry driver. He told him that he wanted to go to Chennai. The lorry driver accommodated the man who wanted to go to Villupuram and did not take this man. He could not go to Maruvathur and he felt disappointed. An express bus arrived after sometime and he was accommodated. But the bus stopped 10km. before reaching Villupuram and on the way they found that the lorry by which he was to travel had met with an accident and two people had died. The communist devotee stated crying because he realized that he would have died if he had boarded the lorry. Everyone around him asked him if the dead were related to him. He explained to everyone how he had intended to board the bus and how he had been refused and how his life was saved. The bus started and reached Maruvathur.

***

# "அம்மாவே அருள் பண்ண வந்தாலும்..."

**வி**ஜயவாடாவில் வசித்து வந்தவர் சக்தி மாணிக்கம். கோவை மாவட்டத்திலிருந்து வியாபார நிமித்தமாக விஜய வாடாவில் குடிபெயர்ந்தவர் அவர். இருபது ஆண்டுகளாக விஜயவாடாவிலேயே வாழ்ந்து வந்தார்.

வாழ்க்கையில் படமுடியாத அவதிகள் பட்டார். பங்காளிகளால் ஏமாற்றப்பட்டு நொந்து போன நிலையில், ஒரு முறை காஞ்சிப் பெரிய பெரியவரிடம் சென்றார்.

ஏதாவது ஒரு முருகன் கோயிலில் திருப்பணி செய்து கொண்டு வா! என்று பெரியவர் கூறினார்.

விஜயவாடாவில் முருகன் கோயிலில் முக்கிய பொறுப்பு வகித்துப் பல திருப்பணிகளை மேற்கொண்டு வந்தார். அந்தப் புண்ணியம் தான் அவரை அன்னை ஆதிபராசக்தியிடம் கொண்டு வந்து சேர்த்தது.

அம்மாவிடம் வந்த பிறகு பல பிரச்சனைகள் தீர்ந்தன. "உன் பகுதியில் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் அமைத்து ஆன்மிகப் பணிகள் புரிந்து வா!"என்று அருள்வாக்கில் உத்தரவிட்டாள் அன்னை.

விஜயவாடா எங்கே? மேல்மருவத்தூர் எங்கே? இங்கிருந்து மேல்மருவத்தூருக்கு மக்கள் இருமுடி போட்டுக் கொண்டு எங்கே வரப் போகிறார்கள்? யாரும் வரமாட்டார்கள் எனக் கருதி அலட்சியமாக இருந்து விட்டார்.

மேல்மருவத்தூரில் பக்தர்கள் இருமுடி செலுத்தும் நாட்கள் நெருங்கின. அந்த சமயம் தான் சக்தி மாணிக்கம் அவர்கள் வீட்டில் அந்த அற்புதம் நடைபெற்றது.

இவர் வீட்டில் ஒரு நாள் அமர்ந்திருந்த சமயத்தில் ஒரு பெண்மணி வந்தார். மிகப் பெரிய பணக்காரப் பெண்மணி போலத் தோற்றம், கழுத்து நிறைய நகைகள், களையான முகம், பிராமணப் பெண்மணி போல மடிசார் உடுத்தியிருந்தார்கள்.

விஜயவாடாவில் உள்ள பிரபலமான சில செல்வந்தர்கள் பெயரைக் குறிப்பிட்டு, அவர்கள் எனக்கு உறவினர்கள், இந்த ஊர் வந்தேன். திரும்பி என் ஊர் போய்ச் சேர வேண்டும். பஸ் கட்டணம் குறைகிறது. ஒரு நான்கு ரூபாய் இருந்தால் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார். தெலுங்கில்தான் பேசினார்.

அந்தப் பெண்மணியைக் கண்டு சக்தி மாணிக்கம் நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஏதோ கொடுப்போம் என்று இரண்டு ரூபாய் மட்டும் எடுத்து நீட்டி என்னிடம் இதுதான் இருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்.

நன்றி கூறியபடி ஒரு காலை வாசலின் வெளியே எடுத்து வைத்த அந்தக் கணமே அவர் கண்முன் மாயமாய் மறைந்து விட்டாள் அந்தப் பெண்மணி. சக்தி மாணிக்கம் திகைத்தபடியே நின்றுவிட்டார்.

வந்தவர் ஒரு வேளை நம் அம்மாவாக இருக்குமோ..?

நான்கு ரூபாய் கேட்ட அம்மாவுக்கு இரண்டு ரூபாய்தானே கொடுத்தோம்? என்ன புத்தி. நம்ம புத்தி? முழுவதையும் கொடுத்திருந்தால் கெட்டா போயிருப்போம் என்று பிற்பாடு அங்கலாய்த்துக் கொண்டார்.

இரண்டு நாள் கழித்து மேல்மருவத்தூர் வந்தார். அடிகளாரைத் தரிசித்து திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்து நின்றார்.

அடிகளார் கேட்ட கேள்வி இது

"என்ன சார்! அம்மாவே உங்கள் வீடு தேடி வந்து நான்கு ரூபாய் கேட்டாள். இரண்டு ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள். முழுவதும் கொடுத்திருந்தால் உங்கள் மொத்த ஊழ்வினையும் தணிந்திருக்கும். பாதிதானே கொடுத்தீர்கள்? பாதிதான் தணிந்தது.

ஏழை எளியவர்கட்கு இருமுடி போட்டு அழைத்து வா என்று அம்மா சொல்லியும் அலட்சியமாக இருந்து விட்டீர்கள். அதை நினைவு படுத்தவே உங்கள் வீடு தேடி அம்மா வந்தது.

அம்மாவே அருள் பண்ண வந்தாலும் உங்கள் கருமம் எப்படித் தடுக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படித்தான் பலருக்கும்.. அம்மா அருள் கொடுக்க எண்ணினாலும் அவரவர் ஊழ்வினைகளே தடையாகிவிடுகின்றன.

உடனே ஊர் சென்று முடிந்த அளவு இருமுடி போட்டு ஏழை எளிய பக்தர்களை அழைத்து வாருங்கள்" என்று ஆணையிட்டு அனுப்பினார் அடிகளார்.

# Melbourne - Mandrams – Upcoming Events – July 2017

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

Joint Prayers: Every 3rd Sunday of the month
Thiruvilakku Poojai: Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **09.07.2017** | **Sunday** | **09.00a.m.**<br>**06.10p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |

# "உங்கள் அடிகளார் என்ன பெரிய கடவுளா?"

-

- **சக்தி ஜி.மாலதி** - ஸ்ரீமுஷ்ணம் -

எனக்குத் திருமணமாகிப் பத்து ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியம் இல்லாததால் பல நவீன மருத்துவங்கள் புரிந்தும் கடைசியில் பலன் ஏதும் இல்லை. உங்கள் இருவருக்கும் உடலில் எந்தக் குறைபாடும் இல்லை என்ற சர்டிபிகேட் கொடுக்கத்தான் முடிந்தது விஞ்ஞானத்தால்.

போகாத கோயில்கள் இல்லை. வாழ்வே சூன்யமாகி விட்டது. இந்நிலையில் மேல்மருவத்தூர் மகானின் மகிமை அறிந்து, அவரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு, அவரை அணுகித் திருப்பாதம் பணிந்தோம். நாங்களாய் எதுவும் வாய் திறந்து கேட்கவில்லை. தாமாகவே திருவாய் மலர்ந்து கூறினார்.

**"உங்களுக்கு வெகு விரைவில் முற்றிய ஆண் மகவு பிறக்கும். அடிக்கடி இந்த மண்ணை மிதித்துத் தாய் வீடு போல் தொண்டு செய்ய வேண்டும்" என்றும் கூறி அருளினார். பிறக்கப் போகும் குழந்தையின் அங்க அடையாளம் முதற்கொண்டும் சொன்னார். (வலது விலாப் பகுதியில் ஒரு பெரிய மச்சம் அடையாளம்).**

இவர் எந்த கம்பியூட்டர் அல்லது ஸ்கேனை வைத்திருக்கிறார்? இவ்வளவு துல்லியமாகக் கூறுகிறாரே என்றே எனது மனித மனம் அப்போது நினைத்தது.

**மாதங்கள் சில கடந்தன. நான் கர்ப்பமானேன். ஏழு மாதமாக இருக்கும்போது முத்து துரைராஜ் என்பவர் எனது கணவரின் நண்பர், நாத்திகர். என் கணவரிடம் விதண்டாவாதம் பேசினார். யோவ் உங்க அடிகளார் என்ன பெரிய கடவுளா? அவரு சொன்ன மாதிரியே நடக்கிறதுக்கு! உங்களுக்கு பொம்பளை பிள்ளைதான் பிறக்கும்! என்று கிண்டலாகப் பேசவே பிரச்சனை அதிகமாகி முடிவில் அந்த அடிகளார் சொன்னபடி நடந்தால் "நான் உங்க கோயிலுக்கு வருகிறேன்". இல்லையென்றால் நீ என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்க, "நான் கோயிலுக்கே இனிப் போவதில்லை என்று கூறிவிட்டார்"என் கணவர்.**

**முடிவில் மருவூர் மகான் சொன்ன அங்க அடையாளத்துடன் ஆண் குழந்தை பிறந்தது. நாத்திக நண்பரோ அடிகளாரின் அருள்வாக்கால் ஆத்திகர் ஆனார்.**

## Melbourne - Mandrams – Upcoming Events – July 2017



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 07.07.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.07.2017 | SATURDAY– சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 14.07.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.07.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.07.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

குருவடி சரணம்! திருவடி சரணம்!

# “ஆடிப்பூர பெருவிழா”

**கஞ்சி வார்த்தலும் பாலாபிடேகமும்**

## Aadipooram festival

**30.07.2017 ஞாயிறு**
**காலை 10.00மணி**

**Highvale Primary School**
Cnr of Ashton Street & Plymouth Street
Glen Waverley 3150
(Mel.Ref.: 62 E 10)

ஆடிப்பூரத்திற்கு அங்கவலம் வருதல், கஞ்சி வார்த்தல், பாலாபிடேகம் செய்தல் என்றெல்லாம் இத்தனை வருடங்களாகச் செய்துவிட்டோம். இவ்வளவு போதும் என்று நினைக்காதே. எத்தனை வருடம் கலந்துகொள்கிறாயோ அத்தனை வகையான அனுபவங்கள் உனக்கு ஏற்படும்.”

**– அன்னையின் அருள்வாக்கு**

## Lalor

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 09.07.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**“ஆடிப்பூர பெருவிழா”**
**30.07.2017 ஞாயிறு – மாலை 4.00 மணி**

“அடிகளாரின் பார்வை படுதல், அவனுக்குப் பாதகாணிக்கை செலுத்தும் வாய்ப்புப்பெறுதல், அவனிடம் சந்தேகம் கேட்டல், அவனுடைய ஆசியும், அருளும் பெறுதல் ஆகியவை இவை யாவும் தற்செயலாக உங்களுக்குக் கிடைத்தவை அல்ல! முற்பிறவியில் நீங்கள் செய்த நல்வினைப் பயனால் கிடைப்பவை.”

**- அன்னையின் அற்புதங்கள்**

# அம்மவாலும் மன்னிக்க முடியாத பாவம்: அகம்பாவம்

சக்தி ஸ்ரீனிவாசன், பொது செயலாளர் (General Manager), L & T, சென்னை

“மகனே! பஞ்சமா பாதகங்களைச் செய்து விட்டு, மன்னிப்புக் கோரி என்னிடம் அழுதால் மன்னிப்பு தந்து அருள் பாலிக்கிறேன். ஆயினும் நான் மன்னிக்க கூடாத குற்றம் ஒன்று உண்டு! அது என்ன தெரியுமா? அதுதான் ஆணவம்! அகங்காரம்! அந்த அகம்பாவத்தை மன்னிக்க மாட்டேன்.”என்று அன்னை அருள்வாக்கில் அருளியது உண்டு.

உள்ளிருந்தே பாவத்தைச் செய்யத் தூண்டுவதால் அந்த அகங்காரத்துக்கு ‘அகம் + பாவம் = அகம்பாவம்’என்றே பெயர். இறைவனிடம் தன்னை ஒப்படைத்துவிட்ட தொண்டர்கட்கு ஆணவம் வரக்கூடாது. ஏன்? சரணாகதி அடைந்த தொண்டர்கள் மனத்தில் உள்ள ஆணவத்தை இறைவன் வேரோடு கிள்ளி எடுத்து விடுகிறான். அதன்பின் அவர்கள் மனத்தில் கோயில் கொண்டுவிடுகிறான் இறைவன்.

### குமர குருபரர் கூறுவது:

இதனைக் குமர குருபரர், “அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே” என்று மதுரை மீனாட்சியைப் போற்றிப் பாடுகிறார்.

### திருமூலர் கூறுவது:

“வானப் பெருங் கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனை
கானக் களிறு கதறப் பிளந்த எம்
கோனைப் புகழுமின்! கூடலும் ஆமே!” - திருமந்திரம்

“வானத்து மேகம் போன்ற கருநிறம் கொண்டவன் திருமால் அந்தத் திருமாலுக்கும், பிரமனுக்கும், மற்றுமுள்ள தேவர்கட்கும், மானிடப்பிறவி கொண்ட மக்களுக்கும் பிறவித் துன்பத்தை ஒழிக்கும்படி அருள் செய்பவன் இறைவன். அத்தகைய இறைவனைத் துதித்து வழிபட்டால் நமக்குள்ளே காட்டு யானைபோல ஒளிந்திருக்கும் ஆணவத்தைப் பிளந்து தள்ளுவான் இறைவன். அந்த ஆணவம் என்ற யானை செத்தொழிந்தால் இறைவனோடு எளிதாக் கூடலாம்” என்கிறார் திருமூலர்.

### பரிணாம வளர்ச்சி

எண்ணிக்கையில் அடங்காத ஆன்மாக்கள் அணு வடிவத்தில் இந்த பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளன. அவற்றுக்கு உடம்பு தந்து, உடல் உறுப்புக்கள் தந்து, அவை வாழ்வதற்கான உலகமும் தந்து படிப்படியாக முன்னேறி வர அருள் பாலிக்கிறாள் அன்னை.

ஆன்மாக்கள் புழுவாய், பறவையாய், விலங்காய்ப் பிறந்து கடைசியாக மானிடப் பிறவிக்கு வருகின்றன. இதிலிருந்து மனிதன் மேலும் முன்னேறித் தெய்வ நிலைக்குப் போக வேண்டும் அந்தப் பரம்பொருளில் சென்று கூடுதல் வேண்டும். உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் நோக்கம் இதுவே! உயிருக்கு அழிவு என்பது இல்லை உடம்பு மட்டும் தான் அழிகிறது. உலகில் உள்ள எந்தப் பொருளும் அழிவதில்லை! அவை வேறு ஒரு பொருளாக மாற்றம் அடைகின்றன என்பது விஞ்ஞான கொள்கை.

### மூன்று அழுக்கு

பெறுதற்கரிய இந்த மானிடப் பிறவியைப் பெற்ற பிறகும் மனிதனுக்கு இந்த உயிர் வாழ்க்கையின் இலட்சியம் புரிய மாட்டேன் என்கிறது. ஆணவம் என்கிற அழுக்கு உள்ளிருந்தே தொழில் புரிய ஆரம்பிக்கிறது. இந்த அழுக்கை ‘மலம்’ என்றே சைவ சித்தாந்திகள் குறிப்பிடுகிறார்கள். மனிதனைப் பிறவியில் தள்ளுகிற மூன்று அழுக்குகளை ‘மும்மலம்’ என்றே சொல்வார்கள். அவை: 1) ஆணவம், 2) கன்மம், 3) மாயை. இவற்றில் போக்க முடியாத பெரிய அழுக்கு ஆணவம்தான்! செம்பில் களிம்பு வந்து படிவது போல உயிரோடு ஒட்டிக் கிடக்கிற அழுக்கு இது.

### ஆணவம் அகல மறுபிறவி வராது

மனிதன் ஆணவ மலத்தின் இருப்பீடம். அதில் மூழ்கிக் கரையேற வழியில்லாமல் தவிக்கிறான். அதனால் அடுத்தடுத்துப் பிறவிக்கு வருகின்றான். அன்னையின் அருளால் மட்டுமே மீண்டும் பிறவிகள் எடுக்காமல் மனிதனைக் காப்பாற்ற முடியும். அவளால்தான் நமக்குள்ளேயே இருக்கிற ஆணவம் என்கிற கானக் களிறைக் கொன்று அருள்பாலிக்க முடியும். அதற்கான முயற்சிக்கு அன்னையை நாம் நாட வேண்டும். ஆணவம் அறவே ஒழிந்து அது பூஜ்யமாக வேண்டும். அத்துடன் புதிய கர்மவினைகளைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. பிராப்த கர்ம வினையும், ஆகாமிய வினையும் பூஜ்யமாக வேண்டும். இந்த நிலைக்கு நாம் வந்துவிட்டால் மறுபிறவி வராது. சிறிதளவு ஆணவம் இருந்தால் கூட, அது மறுபிறவிக்கு வித்தாய் அமைந்துவிடும். அதனால்தான் ‘நான்’என்பது போக வேண்டும் என்கிறார்கள்.

(தொடர்ச்சி…15ஆம் பக்கம்)

# அம்மவாலும்...

## ஆணவம் வருவது எப்படி?

மனிதனுக்கு அநேக காரணங்களால் ஆணவம் உண்டாகிறது. முக்கியமாக கல்வியினால், உடல் பலத்தால், செல்வத்தால், இளமையால், படை பலத்தால் ஒவ்வொருவரிடமும் ஆணவம் தலைவிரித்து ஆடுகின்றது. இந்த ஆணவத்தால் பலர் அழிந்திருக்கின்றார்கள்.

## அன்னையின் அருளோடு ஆணவத்தை ஒழிப்போம்:

நோய்கள் உடல் நலத்தைக் கெடுக்கும். அதுபோல் உயிரின் நலத்தைக் கெடுக்கிற நோய் ஆணவம் என்கிற நோய். ‘ஆணவம்’என்கிற இநத நோய் நீங்காதவரை இறையருள் எளிதில் கிடைப்பதில்லை. ஆணவம் குடிகொண்ட நெஞ்சினர்க்குக் கடவுளின் இருப்பு புலப்படுவது இல்லை. அதனால்தான் இந்த ஆணவத்தை ‘கானக்களிறு’ என்கிறார் திருலர். மதம் பிடித்த காட்டு யானை போல இந்த உள்ளத்துக்குள்ளேயே இருந்து நம்மை அழிப்பது ஆணவமே! அன்னையின் அருள் வேண்டுமானால் ஆணவம் ஒழிய வேண்டும்.
ஓம் சக்தி.

### பிறருக்காக வாழ்

தனக்காக வாழ விரும்பாமல் பிறருக்காக வாழ வேண்டும். பொன்னுக்கும், பொருளுக்கும், புகழுக்கும் ஆசைப்படுவதால் வருவதே வேதனை! ஆன்மா என்பது அனைவருக்கும் ஒன்றுதான்! உனக்காக மற்றவர்கள்! மற்றவர்களுக்காக நீ! என்று வாழ வேண்டும். உன் ஆன்மா நிலையாக இருந்தால் அனைத்தும் நிலையாக இருக்கும்.

### வளர வேண்டிய குணங்கள்

ஆன்மிகத் துறையில் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தாயன்பால் தான் எதையும் சாதிக்க முடியும். கட்டுப்பாடு, பாசம், அன்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை உங்களிடம் வளர வேண்டும்.

## ஆன்மிக ஈடுபாடு உன் தலைமுறையைக் காப்பாற்றும்:

**“ஒரு செடியை நடுகின்றபோது தனக்கு ஆகாதா செடி இது என்று கருதி வேறொரு செடியை நடுகிறாய். அடுத்தவன் அதுபற்றிக் குறை சொன்னால் பறித்துவிட்டு வேறொரு செடியை நடுகிறாய். செடிகளை நடும்போது பல தொல்லைகள் ஏற்படுகின்றன. வளர்ந்த பிறகு பூச்சிகள் அழிக்கின்றன. அதைக் கட்டிக்காக்கப் பொருளாதாரம் இடந்தரமாட்டேன் என்கிறது. எல்லா நெருக்கடியும் கடந்து விவசாயம் பலன் தரும்போது தான் அதன் பலனை உணர்கிறாய். அப்படி மரமாகிப் பலன் தருபவை உனக்கு மட்டுமின்றி உன் சந்ததிக்கும் பலன் தருகின்றன.**

**அதுபேலவே நீ ஆன்மிகத்தில் ஈடுபடும் போது பலர் உன்னைப் பலவிதமாகப் பேசுவர். பல இடையூறுகளும் வரும். வீட்டிலும் தொல்லைகள் வரலாம். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஐம்புலன்களை அடக்கித் தியானத்தை மேற்கொண்டு முழுமையாக ஆன்மிகத்தில் ஈடுபடும்போது தான் ஆன்மிகத்தில் முழுப்பயனையும் உன்னால் பெறமுடியும். அவ்வாறு உனக்கு ஏற்படும் பயன்கள் உனக்கு மட்டுமின்றி உன் சந்ததிக்கும் கிடைக்கும்.”**

**- அன்னையின் அருள்வாக்கு**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 04.07.2017 | செவ்வாய் | ஆனி | 20 | **ஸ்மார்த்த ஏகாதசி விரதம்** |
| 05.07.2017 | புதன் | ஆனி | 21 | **வைஷ்ணவ ஏகாதசி விரதம்** |
| 07.07.2017 | வியாழன் | ஆனி | 22 | **பிரதோஷ விரதம்** |
| 08.07.2017 | சனி | ஆனி | 24 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப்பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம்-சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 09.07.2017 | ஞாயிறு | ஆனி | 25 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 12.07.2017 | புதன் | ஆனி | 28 | சங்கட சதுர்த்தி |
| 16.07.2017 | ஞாயிறு | ஆனி | 32 | ஸ்ரீ விசாலாட்சி இலட்சார்ச்சனை ஆரம்பம்<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 17.07.2017 | திங்கள் | ஆடி | 01 | ஆடிப்பிறப்பு |
| 18.07.2017 | செவ்வாய் | ஆடி | 02 | ஆடிச் செவ்வாய் 1ஆவது வாரம் |
| 19.07.2017 | புதன் | ஆடி | 03 | கார்த்திகை விரதம் |
| 20.07.2017 | வியாழன் | ஆடி | 04 | ஏகாதசி விரதம் |
| 21.07.2017 | வெள்ளி | ஆடி | 05 | பிரதோஷ விரதம் |
| 23.07.2017 | ஞாயிறு | ஆடி | 08 | **ஆடி அமாவாசை விரதம்** |
| 25.07.2017 | செவ்வாய் | ஆடி | 09 | ஆடிச் செவ்வாய் 2ஆவது வாரம் |
| 26.07.2017 | புதன் | ஆடி | 10 | சதுர்த்தி விரதம் |
| 27.07.2017 | வியாழன் | ஆடி | 11 | **ஆடிப்பூரம்**<br>ஸ்ரீ விசாலாட்சி இலட்சார்ச்சனை நிறைவு<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 28.07.2017 | வெள்ளி | ஆடி | 12 | ஷஷ்டி விரதம்<br>கொடியேற்றம் - நல்லூர் கந்தசாமி கோயில் - இலங்கை |
| 01.08.2017 | செவ்வாய் | ஆடி | 16 | ஆடிச் செவ்வாய் 3ஆவது வாரம் |
| 03.08.2017 | வியாழன் | ஆடி | 18 | ஏகாதசி விரதம் |
| 04.08.2017 | வெள்ளி | ஆடி | 19 | வரலக்ஷ்மி விரதம் |
| 06.08.2017 | ஞாயிறு | ஆடி | 21 | விஷ்ணு கொடியேற்றம் - சிவா-விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 07.08.2017 | திங்கள் | ஆடி | 22 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப்பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம்-சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 08.08.2017 | செவ்வாய் | ஆடி | 23 | ஆடிச் செவ்வாய் 4ஆவது வாரம் |
| 11.08.2017 | வெள்ளி | ஆடி | 26 | மஹாசங்கட சதுர்த்தி |
| 13.08.2017 | ஞாயிறு | ஆடி | 28 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 15.08.2017 | செவ்வாய் | ஆடி | 30 | ஆடிச் செவ்வாய் 5ஆவது வாரம் - கார்த்திகை விரதம் |
| 21.08.2017 | திங்கள் | ஆவணி | 05 | அமாவாசை விரதம் |
| 25.08.2017 | வெள்ளி | ஆவணி | 09 | விநாயக சதுர்த்தி விரதம் |

